**செய்தி வெளியீடு எண்: 630** **நாள்:29.08.2020**

**செய்தி வெளியீடு**

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நலிந்த/சிறந்த எழுத்தாளர்களுக்கு தமிழக அரசு உதவித்தொகை 2019–2020 (தேதி நீட்டிப்பு)**

தமிழக அரசின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்க (TAMIL NADU ADI DRAVIDAR & TRIBAL ART AND LITERATURE SOCIETY) நிதியிலிருந்து 2019–2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆதிதிராவிடர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர்/பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த 10 எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் அல்லாத ஓர் எழுத்தாளர் ஆக மொத்தம் 11 சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசு வழங்கப்படும். இதற்கான நூல் வெளியிட ரூ.40,000/– வரை நிதியுதவி அளிக்கப்படும். பெயர், முகவரி, படைப்பின் பொருள், போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு செய்யப்படுகிறது. இது குறித்த விவரங்களை தமிழக அரசின் tn.gov.in என்ற இணையதளத்தில் (website) அறிந்து கொள்ளலாம். மேலும் அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

முறையான விண்ணப்பத்துடன், படைப்புகள் எழுத்து வடிவில், 2 (இரண்டு) பிரதிகள் விண்ணப்பதாரரின் கைபேசி எண்கள் குறிப்பிடப்பட்டு, கீழ்க்கண்ட முகவரிக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30.09.2020.

**அனுப்ப வேண்டிய முகவரி**
ஆணையர், ஆதிதிராவிடர் நலம்,
சேப்பாக்கம்,
சென்னை–05.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**